2019 ஜூலை 4]

அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அமைத்துத் தருவார்களா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன், நன்றி.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி சொல்லிவிட்டார்கள்.*

வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

39—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம்

***4970—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மேற்குப் பகுதியில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

ஈரோடு மேற்குப் பகுதியில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஈரோடு வட்டம், பெரியசேமூர் கிராமத்தில், நத்தம் புல எண்.மி 566/25-ல் உள்ள 0.27.30 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலம் போக்குவரத்துத் துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 273.28 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, அந்த இடத்தில் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது 50 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

நான் இந்தக் கேள்வியைக் கேட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு கட்டடப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். ஈரோடு மேற்குப் பகுதியில் அல்ல. ஈரோடு கிழக்குப் பகுதியில்தான் அந்தப் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

பனை வெல்ல ஆலை

***13516—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, மத்தூரிலுள்ள மாவட்ட பனை வெல்ல விற்பனை கூட்டுறவுச் சம்மேளனம் மூலமாக பனை வெல்ல ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. பாஸ்கரன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஊத்தங்கரை தொகுதி, மத்தூரிலுள்ள மாவட்ட பனை வெல்ல கூட்டுறவுச் சங்கம் மூலமாக பனை வெல்ல சர்க்கரை